JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 1 Witness
for Prosecution

| CC. No. | 69/2021 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-1-** ஜெயக்குமார் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of August 2025 | | | |

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

**நான் கடந்த 12/04/2022-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி இந்த வழக்கில் அ.சா.1 ஆக சாட்சியம் அளித்தேன். எனது முதல் விசாரணை அன்றைய தினம் முடிவடையாமல் அதன் தொடர்ச்சியாக நான் இப்போது சாட்சியம் அளிக்கிறேன்.**

1 மற்றும் 2 ம் எதிரிகளின் அறிவுறுத்தலின் பேரில் நான் டெல்லியில் உள்ள Kian Fin Services வங்கிக்கு நான் எனது வங்கி கணக்கிலிருந்து பணம் ரூ.25,00,000/- மும், எனது நண்பர் துளசிதாஸ் அவரது வங்கி கணக்கிலிருந்து ரூ.20,00,000/- அனுப்பினேன். இந்த வழக்கில் எதிரிகளான ராஜேந்திரன், பாலதண்டாயுதபாணி, ராஜா தெக்கன், சந்திரன் மற்றும் தங்கராஜ் என்னுடன் வந்தவர்கள் ஆவார்கள். காவல் நிலையத்தில் அவர்கள் பெயரையும் சேர்த்து என்னை எழுதச் சொன்னதால் தான் நான் அவர்கள் பெயரையும் எதிரிகளாக எனது புகாரில் எழுதினேன். மேற்படி எதிரிகளுக்கு நான்தான் பிணை வாங்கி கொடுத்தேன்.அதற்கான பிணையின்போது நான் ஒரு பிரமாண பத்திரிகையும் தாக்கல் செய்துள்ளேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரை நான் எழுதவில்லை என்றால், சரியல்ல. நான் தான் எழுதினேன். நான் நீதிமன்றத்தில் இந்த வழக்கில் மேல் நடவடிக்கை வேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். நான் மேல் நடவடிக்கை வேண்டி தாக்கல் செய்த மனுவில் போலீசார் என்னிடம் 4-5 வெள்ளை தாள்களில் கையெழுத்து வாங்கிவிட்டு என்னையும், எனது தம்பி ரவிக்குமாரையும் அங்கிருந்து அனுப்பிவிட்டு மற்றவர்களை விசாரித்துவிட்டு அனுப்புவதாக கூறியதாக எனது மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.08.20 06:38:21 +0530

காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதாக கூறி என்னை அனுப்பி விட்டார்கள் என்றால், சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால், நான் புகார் கொடுத்த அன்றைய தினமே என்னை விசாரித்தார்கள். நான் எனது போலீஸ் விசாரணையில் "மேற்படி நபர்கள் ஏழு பேரும் ஒன்று சேர்ந்து கொண்டு என்னையும், என் கூட வந்தவர்களையும் பார்த்து ஏன்டா தேவடியா பசங்களா கண்டாரோலி பசங்களா நீங்க என்ன பெரிய இவங்களாடா நீங்க அனுப்பிய பணத்தை எல்லாம் தரமுடியாது என்று சத்தம் போட்டு பயங்கரமாக தகராறு செய்தார்கள். பணத்தை இனிமேல் எங்கிட்ட கேட்டீங்கனா கோயமுத்தூருக்கு உயிரோட போகமாட்டீங்க என்று அவர்கள் எல்லோரும் சேர்ந்து கொலை மிரட்டல் செய்தார்கள்" என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

நான், 2 நபர்களை தான் கூறினேன். நான், 7 நபர்கள் சேர்ந்து மிரட்டியதாக எனது போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால், சரிதான். நான் புகார் கொடுக்கும்போதும், போலீஸ் விசாரணையின்போதும் நானும், அந்த 7 நபர்களும் அங்கு தான் இருந்தோம் என்றால், சரிதான் புகார் கொடுக்கும்போது அவர்கள் அங்கு இருந்தார்கள். விசாரணையின்போது அவர்களை காவலர்கள் வெளியே அழைத்துச் சென்று விட்டார்கள். புகார் கொடுத்த பின்பு போலீசார் என்னை சம்பவயிடத்திற்கு எதுவும் அழைத்துச் செல்லவில்லை என்றால், சரிதான்.

நான் போலீஸ் விசாரணையின்போது " நான் கொடுத்த புகாரின் படி ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து அதன் பின்னர் பவானி இன்ஸ்பெக்டர் ஆகிய தாங்கள் என்னை விசாரித்தீர்கள். பின்னர் தாங்கள் எங்களை கூட்டிக்கொண்டு மேற்படி தகராறு நடந்த இடத்திற்கு சென்றபோது அங்கு இருந்த எங்களிடம் தகராறு செய்த மேற்படி 7 நபர்களையும் அடையாளம் காட்டினேன்" என்று போலீஸ் விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால், நான் அவ்வாறு கூறவில்லை. அவ்வாறு நான் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு அடையாளம் காட்டினேன் என்று கூறுவது தவறு என்றால், சரிதான்.

துளசிதாஸ் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால், சரிதான். மேற்படி துளசிதாஸ் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால், சரிதான். துளசிதாசும், கோபியை சேர்ந்த செல்வம் என்பவரும் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. தான் என்னிடம் இரிடியம் வியாபாரம் செய்யலாம் என்று கூறினார் என்றால், சரிதான்.

நான் எனது முதல் விசாரணையில் 09/09/2015 ஆம் தேதி மேட்டுப்பாளையத்தில் உள்ள காய்கறி மார்க்கெட் அருகில் வந்தால் இரிடியம் பொருட்களை காண்பிப்பதாக கூறினார்கள் என்றும் 09/09/ 2015 ஆம் ஆண்டு காலை நானும், ரவிக்குமார், துளசிதாஸ், ரங்கநாதன் மற்றும் சந்திரமோகன் தந்தை ஆகியோர்கள் எதிரிகள் கூறியவாறு மேட்டுப்பாளையம் காய்கறி மார்க்கெட் அருகில் சென்றோம் என்றும், அங்கிருந்த எதிரிகள் வாங்க காட்டுகிறோம் என்று கூறி சிறிது தூரம் எங்களை நடக்க வைத்து விட்டு எதிரிகள் அங்கிருந்து தப்பித்து விட்டனர். அது

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.20 06:38:31 +0530

குறித்து நான் காவல் நிலையத்தில் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால், சரிதான்.

11/12/2015 ஆம் தேதி எதிரிகள் அத்தாணி வருவது குறித்து எனக்கு யார் தகவல் கூறினார்கள் என்றால், ரங்கநாதன் என்பவர் கூறினார். எதிரிகள் வருவது குறித்து ரங்கநாதனுக்கு யார் சொன்னார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் பணத்தை 1 மற்றும் 2 எதிரிகளுக்கு அனுப்பவில்லை என்றால், சரிதான். நான் பணத்தை Kian Fin Services எந்த வங்கி கணக்கில் இருந்து அனுப்பினேன் என்றால், எனது சிட்டி வங்கியிலிருந்து அனுப்பினேன். மேற்படி சிட்டி வங்கியில் CCTV கேமராக்கள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி சிட்டி வங்கிக்கு என்னுடன் எதிரிகள் வந்திருந்தால் CCTV கேமராவில் பதிவாகியிருக்கும் என்றால், சரிதான்.

துளசிதாஸ் Kian Fin Services பணம் அனுப்பும்போது நான் அவருடன் இல்லை என்றால் சரிதான். எதிரிகள் அத்தாணி வரும் விஷயத்தை தெரிந்து கொண்ட நான் துளசிதாசை அத்தாணிக்கு வரச் சொல்லி அழைத்தபோது அவர் என்னுடன் வரவில்லை என்றால், சரிதான். அவர் ரியல் எஸ்டேட் தொழில் காரணமாக வரவில்லை. 07/09/2015 ஆம் தேதி Kian Fin Services பணம் அனுப்பியது தொடர்பாக இந்த வழக்கிற்கு முன்பு நானும், துளசிதாசும் எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால், சரிதான்.

நான் முதல் விசாரணையில் சொல்வது தவறு என்றாலும், எனது நண்பர் துளசிதாஸ் மற்றும் கோபியை சேர்ந்த செல்வம் என்பவர்களின் ஏற்பாட்டில் தான் நான் Kian Fin Services க்கு பணம் அனுப்பினேன் என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால், சரியல்ல. எதிரிகள் சம்பவத்தில் உண்மையாகவே ஈடுபட்டிருந்தால் நான் 09/09/2015 ஆம் தேதியே எதிரிகள் மீது புகார் கொடுத்து இருப்பேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை சொல்வதுபோல் துளசிதாசும் பணம் கொடுத்து ஏமாந்து இருந்தால் அவரும் எதிரிகள் மீது புகார் கொடுத்து இருப்பார் என்றாலும், துளசிதாசுக்கும், கோபியை சேர்ந்த செல்வம் என்பவருக்கும் இந்த வழக்கில் சம்பந்தம் இருப்பதால்தான் துளசிதாஸ் எவ்வித புகார் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

துளசிதாசிற்கும் இக்குற்ற சம்பவத்தில் தொடர்பு இருப்பதால் தான் அவர் என்னுடன் அத்தாணி வரவில்லை என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்வது தவறு என்றாலும், துளசிதாசும், கோபியை சேர்ந்த செல்வம் என்பவரும் அறிவுறுத்தலின் பேரில் நான் பணம் வங்கிக்கு அனுப்பி விட்டு இந்த சம்பவத்திற்கு பின்னிட்டு செல்வம் இருந்ததால் செல்வத்துடன் ரியல் எஸ்டேட் தொழில் தொடர்பாக இருந்து வந்த 1 மற்றும் 2 எதிரிகளிடமிருந்து பணம் பறிப்பதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால், சரியல்ல.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.20 06:38:40 +0530

Kian Fin Services டெல்லியில் செயல்படும் நிறுவனம் என்றால், சரிதான். அது பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால், சரிதான். மேற்படிKian Fin Services நிறுவனத்திற்கு முகவரி உள்ளது என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரிகள் சொல்லித்தான் நான் Kian Fin Services பணம் அனுப்பினேன் என்று கூறுவது தவறு என்றாலும், சரியல்ல. நான் கூறுவது தவறு என்றாலும் 07.0.09.2015 ஆம் தேதி 1 மற்றும் 2 எதிரிகள் என்னுடன் சேர்ந்து சிட்டி வங்கிக்கு வந்தார்கள் என்று கூறுவது தவறு என்றால், சரியல்ல. மகேஷ் என்ற எதிரி என்னுடன் வந்தார். நான் எனது போலீஸ் விசாரணையின்போது மகேஷ் தான் என்னுடன் வந்தார் என்று கூறினேன் என்றால் கூறினேன்.

நான் முதல் விசாரணையில் என்னுடன் 2 நபர்கள் வந்தார்கள் என்று கூறுவது தவறு என்றால் சரிதான். நான் கூறுவது தவறு என்றாலும், என்னுடன் மகேஷ் சிட்டி வங்கிக்கு வரவில்லை என்றால், சரியல்ல. நான் புகாரில் என்னுடன் வங்கிக்கு 2 நபர்கள் வந்தார்கள் என்று புகாரில் கூறியுள்ளது தவறு என்றால், சரிதான். இந்த வழக்கிற்கும் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு சம்பந்தம் இல்லை என்றால், சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ஏதோ ஒரு வகையில் நான் பணத்தை ஏமாந்து விட்டு எதிரிகளை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் 3 முதல் 7 எதிரிகள் வரையானவர்களுக்கு பிணை மனு தாக்கல் செய்யும்போது அவர்கள் தவறுதலாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்ட விஷயம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். மேற்படி எதிரிகள் தவறுதலாக சேர்க்கப்பட்டதற்கு நான் இந்த நீதிமன்றத்தில் எந்த நடவடிக்கையும் மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் 3 முதல் 7 வரையிலான எதிரிகளையும் சேர்த்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததற்கு நான் எவ்வித தடை மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் தாக்கல் செய்த வழக்கு தவறு என்றுதான் நான் மேல் விசாரணை வேண்டி மனு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான்.

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.20 06:38:50 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.